இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 04 – திங்கள்கிழமை 20 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 339 : Thiruvalluvar Year - 2057 - Aadi 04 - Monday 20 July 2026 - Dak 8 Pages ₹ 5.00


## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது! ஒன்றிய அரசு கூட்டிய

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு !

## திரிணாமுல் காங். பிளவு கோஷ்டி பங்கேற்றதால் எதிர்ப்பு!

**புதுடெல்லி, ஜூலை 20 - நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குவதை முன்னிட்டு புதுடில்லியில் நேற்று (19.7.2026) அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அதிருப்தி எம்.பி.க்கள் பங்கேற்றதால், இக்கூட்டத்தில் இருந்து தி.மு.க., காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.**

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று (20.07.2026) தொடங்கி, ஆகஸ்ட் 13 வரை நடக்கிறது.

இக்கூட்டத்தொடரில், மகளிர் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா, ஒரே நாடு; ஒரே தேர்தல், தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்பு திருத்த



மசோதாவை நிறைவேற்ற பா.ஜ., தலைமையிலான தே.ஜ., கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், நேற்று (19.07.2026) ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது. இதில், ஒன்றிய அமைச்சர்கள் அமித் ஷா, கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### டி.ஆர்.பாலு – திருச்சி சிவா பங்கேற்பு!

தி.மு.க. சார்பில் மக்களவை கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அதிருப்தி எம்.பி.க்கள் பங்கேற்றதால், தி.மு.க., காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

### எதிர்க்கட்சிகள் கூண்டோடு வெளிநடப்பு!

பிறகு அனைத்துக் கட்சி கூட்டத்தில் இருந்து தி.மு.க., சமாஜ்வாதி காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, சிவசேனா, சமத்துவ பிரிவு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூண்டோடு வெளிநடப்பு செய்தன.

கூட்டத்தில் மசோதா மீது எதிர்க்கட்சிகள் ஆக்கபூர்வமான விவாதங்களை முன் வைக்கவும், சுமூகமாக மழைக்கால கூட்டத்தொடரை நடத்த ஒத்துழைப்பு வழங்கவும் ஒன்றிய அரசு தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இன்று தொடங்கும் நாடாளுமன்றக் கூட்டத்தில் ஒன்றிய அரசால் பிறப்பிக்கப்பட்ட சில அவசர சட்டங்களுக்கு மாற்றான மசோதாக்கள், இந்தக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப்பட உள்ளன.

முக்கிய மசோதாக்கள் தாக்கலாக வுள்ள நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக நீட் வினாத்தாள் கசிவு, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு, மேற்காசிய தாக்குதல்களில் இந்திய மாலுமிகள் உயிரிழப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பெற்றோரை தாக்கி சிறுமி கடத்தல்!

*திருவள்ளூர், ஜூலை 20 -*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு அடுத்த புண்ணியம் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தன் கூலித்தொழிலாளி. மகள் சந்தியா (16) என்ற சிறுமியை வெள்ளிக்கிழமை இரவு ஆந்திர மாநிலம் நகரி பகுதியைச் சேர்ந்த 8 பேர் அத்துமீறி வீட்டில் புகுந்து ஆனந்தன் அவரது மனைவி லட்சுமியை தாக்கி அவர்களின் மகளை கடத்தி சென்று விட்டதாக கூறி திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வந்திருந்தனர்.

காவல் நிலையத்தில் ஆய்வாளர் மலர் இல்லாத நிலையில் தலைமை காவலர் ஒருவர் மட்டும் பணியில் இருந்தார். அவரிடம் புகார் அளிக்க சென்ற லட்சுமியை நீண்ட நேரம் காக்க வைத்து எந்த ஊரு என்று கேட்டு பொதட்டூர் பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். இங்கு புகார் கொடுக்க கூடாது என்று தெரிவித்தார். சிறுமியை கடத்தியதால் இங்கு புகார் அளிக்க வந்தோம் என்று கூறியும் பொருட்படுத்தாமல் புகார் பெற மறுத்து அனுப்பிவிட்டனர்.

வேறு வழியின்றி தம்பதிகள் பொதட்டூர் பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றனர்.

## பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள் விரைவில் அறிமுகம்!

### இந்திய ரிசர்வ் வங்கி முடிவு!

*புதுடெல்லி, ஜூலை 20-*

இந்தியாவில் நாம் தற்போது பயன்படுத்தும் காகித பண நோட்டுகள் சீக்கிரம் அழுக்காகி விடுகின்றன. அத்துடன் வெயிலில் வியர்த்து நனைவது, மழையில் தண்ணீர்பட்டு நனைவது, சிலர் ரூபாய் நோட்டுகளை பல அடுக்கு மடித்து வைப்பதால் கிழிந்து பயன்படுத்த முடியாமல் போவது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதுபோன்ற நோட்டுகளை ரிசர்வ் வங்கி திரும்ப பெற்று வந்தாலும், அதிலும் சில பிரச்சினைகள் உள்ளன. இந்த பிரச்சினைகளை கருத்தில் கொண்டு நீண்ட நாள் உழைக்க கூடிய பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை விரைவில் அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ள ரிசர்வ் வங்கி அதற்கான முதல்கட்ட பணிகளை தொடங்கி உள்ளது. இதன் தொடக்கமாக அடுத்த ஆண்டு (2027) ரூ.10 மற்றும் ரூ.20 ஆகிய பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை சோதனை அடிப்படையில் புழக்கத்தில் விட திட்டமிட்டுள்ளது.

இதையடுத்து பாரதிய ரிசர்வ் பேங்க் நோட் முத்ரான் பிரைவேட் லிமிடெட், பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை தயாரிப்பதற்கு பிரத்யேக பாலிமர் சப்ஸ்ட்ரேட் என்ற தாள்களை வழங்க உலகளாவிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்து, டெண்டர் வெளியிட்டுள்ளது. விண்ணப்பங்களை சமர்ப்பிக்க ஆகஸ்ட் 18ம் தேதி கடைசி நாளாகும். பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள் வந்தாலும், தற்போது புழக்கத்தில் உள்ள காகித ரூபாய் நோட்டுகளும் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டம்!

# நாடாளுமன்றம் நோக்கிய பேரணியை வெற்றியடையச் செய்யுங்கள்!

### சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் வேண்டுகோள்!

*புதுடெல்லி, ஜூலை 20 -*

ஜந்தர் மந்தரிலிருந்து தான் அகற்றப்பட்டது சட்டவிரோதக் காவல் நடவடிக்கை என்று சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் மருத்துவமனையிலிருந்து தெரிவித்தார்.

மேலும், நாளை (ஜூலை 20) கரப்பான்பூச்சி ஜனதா கட்சி திட்டமிட்டுள்ள நாடாளுமன்றப் பேரணியை வெற்றியடையச் செய்யுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

21வது நாளாக உண்ணாவிரதம் இருந்த சோனம் வாங்சுக் நேற்று டெல்லி காவல்துறையினரால் கட்டாயமாக சஃப்தர்ஜங் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனை தொடர்ந்து அவர் மருத்துவமனையிலிருந்து அனுப்பியுள்ள செய்தியில், "ஜூலை 20ம் தேதி இரண்டாவது சுதந்திரப் போராட்டம். அச்சமற்ற இந்தியா, அநீதியற்ற இந்தியா. அநீதியிலிருந்து விடுதலை (தேர்வு வினாத்தாள் கசிவு போன்றவை), அச்சத்திலிருந்து விடுதலை (என்னைச் சட்டவிரோதமாகக் காவலில் வைத்திருப்பது) நோக்கியது இந்தப் போராட்டம்.

இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டமான, நாடாளுமன்றத்தை நோக்கிய இப்பேரணியை மாபெரும் வெற்றியடையச் செய்யுங்கள். இந்தச் செய்தி சஃப்தர்ஜங்கில் நான் சட்டவிரோதமாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து கீதாஞ்சலி மூலம் அனுப்பப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பின்னணி என்ன?

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட போட்டித் தேர்வு முறைகேடு விவகாரத்தில், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி சுற்றுச் சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் டெல்லி ஜந்தர் மந்தரில் ஜூன் 28ம் தேதி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கினார். அவருடன் அபிஜித் தீப்கே தலைமையிலான கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்ற அமைப்பினரும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டம் நேற்று முன்தினம் 20 நாட்களை கடந்த நிலையில் சோனம் வாங்சுக் உடல்நிலை மோசமடைந்தது. அவர் சுமார் 9 கிலோ எடையை இழந்தார். அவரது உயிரைக் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என டெல்லி உயர் நீதிமன்றம் 2 நாட்களுக்கு முன்பு உத்தரவிட்டது.

இந்நிலையில், சோனம் வாங்சுக் மற்றும் அவருடன் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தினமும் 2 முறை உடல்நல பரிசோதனை செய்யுமாறு 3 அரசு மருத்துவமனைகளுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டது.

போராட்டம் நேற்று 21ம் நாளை எட்டியது. இந்நிலையில், மருத்துவ பணியாளர்களும் சாதாரண உடை அணிந்த போலீஸாரும் நேற்று காலை 7.30 மணிக்கு ஜந்தர் மந்தருக்குச் சென்றனர். அங்கு உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த வாங்சுக்கை தூக்கி வாகனத்தில் ஏற்றினர்.

பின்னர் அவரை விஎம்எம்சி சப்தர் ஜங் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னதாக, உயர் நீதிமன்ற உத்தரவின்படி சோனம் வாங் சுக்கை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயன்ற போது, அங்கிருந்த போராட்டக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும் காவல் துறையினர் அவர்களை சமாதானப்படுத்தி அங்கிருந்து கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர்.

## ரூ.300 கோடி மதிப்பீட்டில் 'திராவிட மாடல்' ஆட்சியில் கட்டப்பட்ட

# கோவை பெரியார் அறிவுலகம் திறப்பு விழா எப்போது?

### முதல்வர் தேதிக்காக காத்திருக்கும் அவலம்!

கோவை, ஜூலை 20 -

கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த நூலகத்திற்கு பெரியார் அறிவு உலகம் என்ற பெயரை சூட்டி அவரின் திருக்கரத்தால் 6.11.2024 அன்று இந்தப் பணியை துவக்கி வைத்தார்கள்.

ரூபாய் 245 கோடி மதிப்பீட்டில் இந்த நூலாகத்தின் கட்டிடமும் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புத்தகங்களும் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினி உள்ளிட்டவைகளை சேர்த்து 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,98,000 சதுர அடி பரப்பளவில் தரை தளம் உட்பட ஏழு தளங்களுடன் கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது.

இந்த தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்தில், தரைத்தளத்தில் ஆடிட்டோரியம் மற்றும் அறிவியல் மையம் அமைக்கப்பட்டு உள்ளது. முதல் தளத்தில் அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் போட்டி தேர்வுகளுக்கான நூலகம், மூன்றாம் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம். 4ம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, ஐந்தாம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், 6ம் தளத்தில் பருவ இதழ்கள் மற்றும் இன்குபேஷன் சென்டர், 7வது தளத்தில் அறிவியல் மையம், ஆங்கில புத்தகப்பிரிவு மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. 4 மின் தூக்கிகள், 10 கேஎல்டி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பேனல் அறை. குடிநீர் மற்றும் கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

மேலும், புத்தகங்கள் மற்றும் இபுத்தகங்கள் என சுமார் ரூ.50 கோடிக்கும். கணினி, இதர உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடிக்கும் செய்யப்பட உள்ளது. இந்த பெரியார் நூலகம் கட்டிடமானது கடந்த ஜனவரி மாதத்தில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்னர், கட்டுமான பணிகள் முடியாத நிலையில், பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிடப் பட்டது. இதற்கிடையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், நூலகம் கட்டுமான பணிகளில் தொய்வு ஏற் பட்டது. கடந்த மே மாத இறுதியில் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டு விரைவில் பெரியார் நூலகம் திறக்கப்படும் என தெரிவித்தார்.

இந்நிலையில், கட்டிடத்தின் கட்டுமான பணிகள் முடிந்த நிலையில், எலட்ரிக் தொடர்பான சில பணிகள் மட்டுமே இருப்பதாக கூறப்படுகிறது. தவிர, நூலகத்திற்கு என சுமார் 80 ஆயிரம் புத்தகங்கள் வந்துள்ளது. இவையும் தயார்நிலையில் இருக்கிறது. ஆனால், பெரியார் அறிவுலகம் கட்டிடம் திறப்பதற்கான எவ்வித அறிவிப்பும் தற்போது வரை வரவில்லை. இதனால், அதிகாரிகள் கட்டிட கட்டுமான பணிகளை ஆமை வேகத்தில் மேற்கொண்டு வருகின்றனர். ஒரு வாரத்தில் முடிக்க வேண்டிய பணிகளை முடிக்காமல், அரசின் அறிவிப்பிற்காக காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழ் நாடு தேர்வாணையம் சார்பில் நடத்தப்படும் போட்டித்தேர்வுகள் வரும் ஆகஸ்ட் மாதம் முதல் தொடர்ந்து நடக்க உள்ள நிலையில், பெரியார் அறிவுலகம் கட்டிடத்தை விரைந்து திறக்க வேண்டும் என இளைஞர்கள் மற்றும் போட்டித்தேர்வுக்கு தயாராகி வரும் தேர்வர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "கட்டுமான பணிகள் முடிந்து விட்டது. மிக சிறிய அளவிலான பணிகள் மட்டுமே மேற்கொள்ள வேண்டியுள்ளது. எலட்ரிக் தொடர்பான பணிகள் செய்யப்பட்டு வருகிறது. நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள் வந்துள்ளது. ஆனால், நூலகம் திறப்புக்கான தேதி அறிவிக்கவில்லை. முதல்வரின் தேதிக்காக காத்திருக்கிறோம். அவர்கள் தேதி அறிவித்தால் உடனே திறக்க தயாராக இருக்கிறோம்" என்றனர்.

## குஜராத் அருகே

# பட்டாசு ஆலையில் தீ விபத்து!

### 8 பேர் உயிரிழப்பு!

*அகமதாபாத், ஜூலை 20 -*

குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே பட்டாசு தயாரிக்கும் ஆலையில் பயங்கர தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். RAF வீரர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து நீண்ட போராட்டத்திற்குப் பிறகு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தன.

குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே உள்ள ராமோல்கத்ராட் (RamolGatrad) சாலையில் அமைந்துள்ள பட்டாசு தயாரிப்பு ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆலை வெடித்துச் சிதறியதன் தாக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது, இதன் சத்தம் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் வரை கேட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜம்மு - காஷ்மீரில் கனமழையால் நிலச்சரிவுகள்!

### திடீர் வெள்ளத்தால் 11 பேர் பலி!

*ஸ்ரீநகர், ஜூலை 20 -*

ஜம்மு - காஷ்மீரின் பூஞ்ச் மற்றும் ராஜௌரி ஆகிய மாவட்டங்களில் நேற்று (19.07.2026) பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ளப்பெருக்குகளில் குறைந்தது 11 பேர் உயிரிழந்தனர். மேலும் ஏழு பேர் மாயமாகியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சில நிமிடங்களிலேயே, பெருக்கெடுத்த ஆறுகள் கரைபுரண்டு ஓடி, தாழ்வான பகுதிகளை மூழ்கடித்தது. இந்த வெள்ளத்தில் புதிய பேருந்து நிலையம் பலத்த சேதமடைந்தது. மேலும் பல வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இந்த நிலையில் காணாமல் போன ஒரு பெண்ணின் உடலும் மீட்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள தர்ஹாலி, கண்ட்லி, சுக்தோ மற்றும் ஜமோலா ஆகிய அனைத்து முக்கிய ஆறுகளும் பெருக்கெடுத்து ஓடி, அபாயக் குறியீட்டிற்கு அருகிலோ அல்லது அதற்கு மேலேயோ அபாயகரமாகப் பாய்ந்தன. இந்தப் பெருவெள்ளம் தெருக்களைப் பெருவெள்ளமாக மாற்றியது.

இதனை தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு புலம்பெயர்ந்துள்ளனர்.

### வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

ஜம்மு காஷ்மீர் முழுவதும் ஜூலை 23 வரை மிதமானது முதல் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளதோடு, நிலைமையைக் கண்காணிக்க கட்டுப்பாட்டு அறைகளையும் அமைத்துள்ளனர்.